எனது கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத்தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், அவற்றின் ஒட்டு மொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல், என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக் கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்கான போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுவது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2:2:1 கணக்கீட்டு நியமங்கள்

முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட ஆனால் தற்போதும் பயன் படுத்தப்பட்டுவருகின்ற ரூபா 167,142,573 கிரயமான 15 வகையான நிலையான சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இற்கமைய மீள மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2:2:2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விடுபாடுகள்

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகத்தை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த பிரதான நிர்வாகக் கட்டிடத்தின் பராமரிப்புப் பிரிவுக் கட்டிடம், 33 உத்தியோகபூர்வ மனைகள் மற்றும் அவற்றினது காணி என்பன மீளாய்வாண்டின் போதும் உரிமை மாற்றம் செய்யப்பட்டாததன் காரணமாக அவற்றின் பெறுமதி 11 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறைத்தும் அதிகரித்தும் காட்டுதல்கள்

அனுராதபுர வைத்தியசாலைக்குச் சொந்தமான ஒரு காணி ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பது தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டியிருந்த பெறுமதியான ரூபா 10,000,000 தொகை சொத்துக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இது கையில் உள்ள வைப்புக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டிருந்தமையால் இக் கணக்கு ரூபா 10,000,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

2:2:3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உட்பாய்ச்சலின் போது பிடித்து வைக்கப்பட்ட வரி ரூபா 918,960 பெறுமதியானதுடன் பேரேடு மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 870,019 ஆனமையால் ரூபா 48,941 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு மீளச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 2,397,534 ஆக பேரேட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய பட்டோலைகளின் பிரகாரம் அத்தொகை ரூபா 2,450,823 ஆனமையால் ரூபா 53,290 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) ஓய்வு பெற்ற சேவையை விட்டு விலகிய மற்றும் இடமாற்றம் பெற்றிருந்த 35 ஊழியர்களிடம் இருந்து பல்வேறு கடன் முற்பணங்களின் கீழ் அறவிடப்பட வேண்டிய ரூபா 668,154 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தன.

(ஆ) ரூபா 84,868,569 கூட்டுத்தொகையான பல்வேறு கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது முகாமைத்துவப் பட்டப் பின்படிப்புப் பாடநெறியின் (PGDM) நானாவித செயற்பாடுகளுக்காக 25 சந்தர்ப்பங்களின் போது ரூபா 8,000 முதல் ரூபா 100,000 வரையான பெறுமதிகளைக் கொண்டதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,304,300 கூட்டுத்தொகையான முற்பணக் கணக்குகள் ஆண்டின் இறுதியின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 04 நபர்களுக்கு 04 சந்தர்ப்பங்களின் போது ஆராய்ச்சி முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 305,000 கூட்டுத்தொகை 13 மாதங்கள் முதல் 25 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட போதிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

நிலையான சொத்துப் பதிவேடு, விபரமான பட்டோலைகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் ஆகிய கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 1,512,654,773 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களையும், விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறியின் (பீஜஒஎம்) ரூபா 1,424,300 தொகையான முற்பணங்களின் வரவு மீதியினையும் முற்பணங்களின் விபரமான பட்டோலை மற்றும் உரிய நாட்குறிப்புக்களும் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அப் பாடநெறியிலேயே 23701 ஆம் இலக்க பேரேட்டுக் கணக்கிற்குரிய ரூபா 308,029 தொகையான செலவு மீதியினையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2:2:6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்காக அமுல்படுத்தப்படும் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 2.1 முதல் 2.1.4 வரையான உப பிரிவுகள் | 2010 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது ரூபா 510,000 கொடுப்பனவு செய்து குத்தகைக்குப் பெற்றிருந்த 2 மனைகளிலும் குடியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் மனைகளுக்கான வாடகை அறவிடப்படாதிருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | I உத்தியோகபூர்வ விடுதிகளில் தங்கியுள்ள உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட நீர் மற்றும் மின்சாரப் பயன்பாட்டிற்காக நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வேண்டிய போதிலும் ரஜரட்ட பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் குடியிருந்த இரு விடுதிகளின் நீர்ப் பயன்பாட்டிற்காக முறையே ரூபா 18,698 மற்றும் ரூபா 5,590 தொகைகளும் மின்சாரக் கட்டணமாக முறையே ரூபா 32,124 மற்றும் ரூபா 14,022 தொகைகளும் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | II ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ரம்பேவ மற்றும் மிஹிந்தலை வளாகத்தில் அமைந்துள்ள 55 குடும்ப அலகு இல்லங்களின் உண்மையான நீர் பட்டியல் கட்டணம் ரூபா 869,128 ஆன போதிலும் அதற்காக குடியிருக்கும் ஊழியர்களிடம் இருந்து ரூபா 65,520 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்த காரணத்தினால் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக உபயோகிக்கப் |

பட்ட நீர் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 803,608 தொகைக்கு மேலதிகமான பணம் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

| | | |
|---|---|---|
| (i) | நி.பி.395(அ) | ஒவ்வொரு மாத இறுதியில் தமது கொடுக்கல் வாங்கல் நிலை தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய 03 வங்கிக் கணக்குகளின் 16 வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 880 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சான்று படுத்துகின்ற காசோலைகளில் கைச்சாத்திடும் உத்தியோகத்தர்கள் பிணை கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |

(ஈ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 147/2002 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி

1996 ஆம் ஆண்டு முதல் 2010 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது ஒரு மாதத்திற்கு ரூபா 38 முதல் ரூபா 450 வரையான வாடகைத் தொகை அறவிடப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் 19 குடும்ப வீடுகளினதும் 55 தனியாள் வீடுகளினதும் வீட்டு வாடகையை மீள மதிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 9/2009 ஆம் இலக்க மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய 9/2009 (1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | வருகை மற்றும் வெளிச்செல்கையைப் பதிவு செய்வதற்காக கைரேகைப் பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இது தொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.7 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறைசேரி பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் 2003 ஜுலை 18 ஆந் திகதிய பீஃ/ஐ/என்எஸ்/டீஎல்யூ/எஸ்/ஏ078 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம், பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புத் தொகையைக் கணிப்பிடும் போது கல்விசார் படி மற்றும் மாதாந்த ஈடுசெய்யப்படும் படியும் சேர்த்துக் கொள்ளப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்ட போதும், உரிய படிகளையும் கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் காரணமாக 1998 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 11,477,553 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,174,591 தொகையும் முறையான அதிகாரமின்றி ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமான பங்களிப்பு பண கொடுப்பனவிற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மொழித் தேர்ச்சிக்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் படி அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு ஏற்புடையதாகாது என பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 6 ஆந் திகதிய பீஈ/01/174/11(பீ) இலக்கக் கடிதத்தின் வாயிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் 1999 முதல் 2009 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 3,520,447 தொகையும்

(இ) விடுதிகளுக்காக மிஹிந்தலைப் பல்கலைக்கழகக் காணியில் அமைந்துள்ள பொலிஸ் விடுதியைக் கையேற்கப்படுவதற்காக திறைசேரியினால் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 18 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் கையேற்பு 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த இந்த ரூபா 18 மில்லியன் தொகையும் அதற்காகப் பெறப்பட்டிருந்த வட்டியாகிய ரூபா 8,423,653 தொகையும் 2010 மார்ச் 02 ஆம் திகதி திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பல்கலைக்கழகத்தினால் மீளப்பெறப்பட்டு நோக்கங்களுக்கு மாறாக பல்கலைக்கழகத்தின் வேறு செலவினங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வட்டி தவிர்ந்த ரூபா 18 மில்லியன் தொகை மாத்திரம் மீள இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 3:1 நிதிசார் மீளாய்வு

#### 3:1:1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 173,100,494 தொகையான பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 117,596,632 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 55,503,862 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

#### 3:1:2 பகுப்பாய்வுடன் கூடிய நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற தொகையில் செலவினங்களை மேற்கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 80,503,790 ஆனதுடன் இதற்கொப்பாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 42,293,305 ஆகும். மேலும் மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்ட ரூபா

99,084,694 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மற்றும் ரூபா 3,685,440 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாட்டைக் கருத்திற்கொள்கையில் இப் பற்றாக்குறை ரூபா 183,273,924 வரை அதிகரிப்பதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடான ரூபா 86,141,682 தொகையையும் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடான ரூபா 2,641,143 தொகையையும் கருத்திற்கொள்கையில் பற்றாக்குறை ரூபா 131,076,129 வரை அதிகரித்திருந்தது. எனினும் மேற்குறித்த இந் நிலை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. மீண்டெழும் செலவினத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்டிருந்த தொகைக்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தின் வேறு வருமானத்தைக் கருத்திற் கொள்கையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பற்றாக்குறை முறையே ரூபா 173,100,494 ஆகவும் ரூபா 117,596,632 ஆகவும் காணப்பட்டது.

### 3.1.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தினால் எவ்வித சட்ட ரீதியான உரிமையும் இல்லாத மாத்தளை வைத்தியசாலையின் ஓய்வறையையும் மலசலகூட முறைமையையும் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,350,981 தொகை செலவிடப்பட்டு அதனை மீண்டெழும் செலவினமாகக் கருதி வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

3:2 செயற்பாட்டு மீளாய்வு

3:2:1 செயற்திறன்

மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்திறன் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட இறுதி ஆண்டு பரீட்சைகள் மற்றும் பட்டப்படிப்பில் சித்தியடைதல் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| விபரம் | விவசாய பீடம் | முகாமைத்துவ பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதி ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணாக்கரின் எண்ணிக்கை | 52 | 156 | 88 | 208 |
| பரீட்சைகளில் சித்திபெற்ற மாணாக்கரின் எண்ணிக்கை | 39 | 136 | 65 | பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை |
| பரீட்சைகளில் சித்தியடையாத மாணாக்கரின் எண்ணிக்கை | 13 | 20 | 12 *11 | |
| பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணாக்கரின் எண்ணிக்கையில் பட்டப்படிப்பில் சித்தியடையாத மாணாக்கரின் எண்ணிக்கை சதவீதமாக | 25% | 13% | 14% | |

* பிரயோக விஞ்ஞான பீடத்தில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களான 11 பேரும் விசேட பாடநெறி ஒன்றிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தின் இறுதி ஆண்டுப் பரீட்சை 2010 செப்தெம்பர் 18 ஆம் திகதி முதல் 2010 நவம்பர் 12 ஆந் திகதி வரை

நடாத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு அறிக்கைத் திகதியில் உள்ளவாறும் முடிவுகள் வெளியாகியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய 04 ஆண்டு காலப்பகுதியின் போதும் பல்கலைக்கழகத்தில் உள்ள 05 பீடங்களுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கையும் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறாகும்.

| பீடத்தின் பெயர் | சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை | | | | | பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
| மருத்து பீடம் | 171 | 180 | 181 | 184 | 180 | - | - | - | - | - |
| விவசாய பீடம் | 74 | 113 | 107 | 108 | 95 | 12 | 28 | 54 | 91 | 55 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 95 | 160 | 216 | 173 | 196 | 40 | 91 | 89 | 92 | 69 |
| சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் | 156 | 225 | 275 | 337 | 330 | 119 | 192 | 154 | 114 | 181 |
| முகாமைத்துவ பீடம் | 220 | 211 | 279 | 307 | 276 | 88 | 21 | 162 | 201 | 163 |
| மொத்தம் | 716 | 889 | 1058 | 1109 | 1077 | 259 | 332 | 459 | 498 | 468 |

2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மருத்து பீட மாணவர்கள் 2001 ஆம் ஆண்டின் போது பட்டம் பெற்று வெளியேறியிருந்தனர். ஏனைய பீடங்களில் ஒவ்வொரு ஆண்டிலும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையில் பொது மற்றும் விசேட பட்டங்களைப் பெற்று வெளியேறியமை தொடர்பாக தெளிவாக தரவுகளைப் பெற்றுக்கொள்ள இயலுமான வகையில் ஒவ்வொரு பீடத்திலும் பரீட்சை மற்றும் கல்விப் பிரிவின் தகவல்கள் இருக்கவில்லை.

தெளிவாக தரவுகளைப் பெற்றுக்கொள்ள இயலுமான வகையில் ஒவ்வொரு பீடத்திலும் பரீட்சை மற்றும் கல்விப் பிரிவின் தகவல்கள் இருக்கவில்லை.

(இ) ஒரு மாணவனுக்கான கிரயம்

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் மொத்தக் கிரயம் மற்றும் ஒரு மாணவனுக்காக கிரயம் பின்வருமாறாகும்.

| | விவசாய பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் | முகாமைத்துவ பீடம் | மருத்து மற்றும் சமாந்தர விஞ்ஞான பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்த கிரயம் (ருபா '000) | 73,098 | 91,604 | 97,391 | 97,056 | 112,994 | 472,143 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 497 | 840 | 1,323 | 1,293 | 896 | 4,849 |
| ஒரு மாணவனுக்கான கிரயம் (ருபா '000) | 147 | 109 | 74 | 75 | 126 | 97 |

(ஈ) 2010 ஆம் ஆண்டின் விரிவுரைகள் நடாத்தப்படும் முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பீடம் | திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் | நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் | நடாத்தப்படாத விரிவுரை மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|
| (i) | பிரயோக விஞ்ஞான பீடம் | 7595 | 7563 | 32 |
| (ii) | விவசாய பீடம் | 5246 | 4471<br>• களப் பயணங்களுக்கான காலம் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | 775 |
| (iii) | மானிடவியல் கல்விப் பிரிவு | 720 | 6669 | 351 |
| (iv) | சமூக விஞ்ஞான கல்விப் பிரிவு | 7400 | 7189 | 211 |
| (v) | மருத்து மற்றும் அதனை ஒத்த விஞ்ஞான பீடம் | 2064 | 2064 | - |
| (vi) | முகாமைத்துவ கல்விப் பீடம் | 10560 | 10376 | 184 |
| | | 39885 | 38332 | 1553 |

2010 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 39885 ஆனதுடன் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 38332 ஆனமையால் திட்டமிடப்பட்ட அளவில் 4% ஆன 1553 விரிவுரை மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 தாமதமாகிய செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 206,000,000 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, விலைகள் கோரப்பட்டு நிர்மாணிப்பதற்குத் உத்தேசிக்கப்பட்டிருந்த சமூக விஞ்ஞான மானிடவியல் பீடத்தின் உத்தேச கட்டிடத்திற்காக 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது ஆலோசனைப் படிகள் மற்றும் நிர்வாகக் கட்டணமுமாக ரூபா 1,213,135 தொகையும், மீளாய்வாண்டின் போது கேள்விப் படிவங்கள் வழங்கும் அச்சீட்டுக் கட்டணமும் வரைபடம் வரைவதற்கான கட்டணமுமாக ரூபா 129,416 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் எவ்வித நிர்மாணிப்புகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,794,191 மதிப்பீட்டுத் தொகையிலான சிறுவர் பராமரிப்பு நிலைய நிர்மாணச் செயற்திட்டக் காலம் 2009 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை நீடித்திருந்ததுடன் அந்த ஆண்டின் போது ரூபா 1,016,768 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

3.2.3 முகமைத்துவ திறமையீனங்கள்

(அ) மீளாய்வாண்டிற்கான காசேட்டின் பிரகாரம் 11 சந்தர்ப்பங்களின் போது 03 வங்கிக் கணக்குகளில் நேர் மீதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. "ஒவ்வொரு வங்கி கணக்குகளில் காசுப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகத்தின் ஏனைய வங்கிக் கணக்குகளில் இருந்து மாற்றுவதற்கான அதிகாரம் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளதாக" துணைவேந்தர் அவர்களின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முகாமைத்துவம் காசுக் கட்டுப்பாடு தொடர்பாக தமது பொறுப்பை கருத்திற்கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது விரிவுரைகளுக்காக வாகனங்களில் வருகை தந்தமை தொடர்பாக பகுதிநேர விரிவுரையாளர்களுக்குப் போக்குவரத்துச் செலவினப் படியாக 31 உறுதிச்சீட்டுக்களின் மூலம் 89 நாட்களுக்காக ரூபா 212,844 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் விரிவுரையாளர்கள் தமது வாகனங்களில் வருகை தந்தமை உறுதிப்படுத்தாது இக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

3.2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 127,800 பெறுமதியான 02 வங்கி நடைமுறைக் கணக்குகள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 2,107,871 கிரயமான பல்வேறு சொத்துக்களின் இருப்பும் விலை தொடர்பாக அறிவிக்கப்பட்டிராத தட்டச்சு இயந்திரமொன்றும், 03 கணனிகளும் 06 ப்ரொஜெக்டர்களும் பழுதடைந்த நிலையில் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பொருத்தமான வகையில் கணக்குகளில் இருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 163,875 பெறுமதியான 03 நேரப் பதிவு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டன.

3.2.5 இழப்புகளும் நட்டங்களும்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை செலுத்துவதிலான தாமதத்தின் காரணமாக ரூபா 14,064 தொகை மிகை அறவீட்டுக் கட்டணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

3.2.6 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியணியில் 24 பேராசிரியர் பதவிகளும், 31 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளும் 55 விரிவுரையாளர்/ பயிற்சி விரிவுரையாளர் பதவிகளுமாக மொத்தம் 110 பதவிகளும் கல்விசாரா பதவியணியில் 07 நிறைவேற்றுப் பதவிகளும் 32 நிறைவேற்றுத்தரமல்லாத பதவிகளும் 16 சிற்றூழியர் பதவிகளுமாக மொத்தம் 55 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் பலவீனங்கள் பல்கலைக்கழக துணைவேந்தரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) நிலையான சொத்துக்கள்

ஒப்பம். எச்.ஏ.எஸ் ஸமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Ms/v*

2011.10.17

கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாரள் நாயக திணைக்களம்
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.

ஐயா !

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2010 டிசம்பர் 31 ம் திகதி இறுதி வருடத்திற்கான நிதி வெளியீடு தொடர்பான 1978 இலக்கம் 16 ஐ உடைய பல்கலைக்கழக சட்டத்தின் 108(02) உறுப்புரையிற்கமைய கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பல்கலைக்கழகத்தின் கருத்து தெரிவித்தலும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையும்.

உமது இலக்கம் என்சி/ஏபி/சு/2011/16 மற்றும் 2011 செப்டெம்பர் 06 திகதி கணக்காளர் நாயகத்தின் அறிக்கை பற்றி பல்கலைக்கழகத்தின் கருத்து தெரிவிப்பு , அதுபற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் , விளக்கங்கள் என்பன கணக்காய்வு அறிக்கையில் இலக்க ஒழுங்கேற்ப இத்தால் இத்தால் முன்வைக்கப்படுகிறது.

நன்றி,

.........................................

பேராசிரியர் கே.ஏ. நந்தசேன
உபவேந்தர்

பிரதிகள்: 1. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
2. செயலாளர், உயர்கல்வி அமைச்சு
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பதிவாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2010 டிசம்பர் மாதம் 31 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கை பற்றி 1978 இலக்கம் 16 ஐ உடைய பல்கலைக்கழக சட்டத்தின் 108(02) உறுப்புரையின் 1971 இலக்கம் 38 ஐ உடைய நிதி சட்டத்தின் 13(07) (ஏ) உறுப்புரையின் கணக்காய்வாளரின் அறிக்கைப்பற்றி பல்கலைக்கழகம் கருத்து தெரிவிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

1978 இலக்கம் 16ஐ உடைய பல்கலைக்கழக சட்டத்தின் 106(02) மற்றும் 1971 இலக்கம் 38ஐ உடைய நிதி சட்டத்தின் 107(13) 7 (ஏ) உறுப்புரையின் அடிப்படையில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2010 டிசம்பர் 31 திகதி இறுதி வருடத்திற்காக வருடாந்த கணக்கறிக்கை 2011 பெப்ரவரி 28ம் திகதி கணக்காய்வாளரிடம் கையளிக்கப்பட்டது. அந்த வருடாந்த கணக்கறிக்கைகான கணக்காய்வாளரின் அறிக்கை 2011 செப்டெம்பர் மாதம் 06ம் திகதி கிடைக்கப்பட்டதுடன் அதற்காக பல்கலைக்கழகத்திற்கான கருத்து விளக்கப்படுத்தலும் இன்றைய இலக்கிற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வு அறிக்கையில் இலக்க ஒழுங்குக்கேற்ப இதனுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

2.2. நிதி அறிக்கை பற்றி கருத்து தெரிவிப்பு

2.2.1 கணக்கியல் தரம்.

கழிக்கப்பட வேண்டிய நிதியினை முழுமையாக கழிக்கப்பட்டப்பின் சூனிய பெறுமதியாக கணிக்கப்பட்ட நிரந்தர சொத்துக்களில் பெறுமதி இலக்கை வணிக இலக்கம் 18ன் படி கணக்கியல் புத்தகங்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக தற்போது அசையா சொத்துக்களில் அறிக்கை தயாரிப்பதற்காக கனனி வலையமைப்பு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அங்கு பதிவு செய்து வைப்பதற்கு தேவையான தகவல்கள் முழுமையாகச பெற்றுக்கொள்ளப்பட்டன. சொத்துக்கள் மதிப்பிடுவதற்காக பொறுப்பு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கபடும் மதிப்பீட்டு செய்யும் பணிகள் இறுதி நிலையை அடைந்துள்ளன. இதற்கு அமைவாக அசையாச் சொத்துக்களில் அறிக்கை 2011 வருடத்தின் கணக்கறிக்கையுடன் சமர்ப்பிப்பதற்கு இயலுமானது தற்பொழுது இப்புத்தகங்களில் சூனிய பெறுமானத்தை எடுக்கும் நிலையான சொத்துக்களின் பெறுமதியானது மதிப்பிட்டு முடிக்கப்பட்டுள்ளது.

2.2.2 கணக்கறிக்கையில் குறைப்பாடு

அ. கைவிடல்.

பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில் பல்கலைக்கழகத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த நிர்வாகக் கட்டிடம் , செயற்பாட்டுப்பிரிவு கட்டிடம், உத்தியோகப்பூர்வ விடுதி மற்றும் அதன் நிலப்பகுதி பல்கலைக்கழகத்துக்கு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்த வண்ணம் உள்ளன. நிறைவடைந்தவுடன் அதன் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. குறைவாக அல்லது அதிகமாக காட்டுதல்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திற்கான சிகிச்சை கட்டிடம் நிர்மாணிப்பதற்கான காணியொன்றை பெற்றுக் கொள்வதில் பல வருடங்களாக சிக்கல் நிறைந்த நிலைமையே காணப்பட்டது. ஆயினும் பின்னர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருடன் ஏற்பட்ட உடன்பாட்டுக்கமைய இவ்வைத்தியசாலைக்கான காணியில் ஒரு பகுதியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான சம்மதம் பெறப்பட்டது. அதற்காக அக்காணியில் இருந்த பழைய கட்டிடங்களை அகற்றுவதற்கு போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் சம்மததிற்கேற்ப ரூபா 10,000,000/= ஐ அதற்காக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுவதற்கான சம்மதம் ஏற்பட்டது. இதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியும் பெறப்பட்டது. ஆயினும் 2009ம் வருடத்தினுள் திறைசேரியின் நிதியை பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல் நிலையினால் இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கும் பணி தாமதப்பட்டது. அதன்விளைவாக சம்மதிக்கப்பட்ட நிதியினை பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான அளவு நிதி இருக்கவில்லை. 2010ம் வருடத்தில் இதற்கான நிதியை பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை. அதற்கமைவாக வழங்குவதற்கு சம்மதிக்கப்பட்ட நிதியை வழங்காமல் சேமிப்பு கணக்கில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எப்படியாயினும் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டவாறு கடனாளியின் கணக்குக்கு மாற்றுதலானது 2011.06.29 ம் திகதி 124/2011 ஜர்னல் அறிக்கை மூலம் செய்யப்பட்டது.

### 2.2.3. பூரணப்படுத்தப்படாத நிருவாக கணக்கு

(அ) 2010 டிசம்பர் 31 ன் நிதி அறிக்கையின் படி WHT வரி ரூபா 918,960/= பணத்தை நிதி அறிக்கைகளில் சரியாக குறிப்பிடப்பட்டதுடன் அட்டவணை சமர்ப்பிர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தால் ரூபா 48941/= ஆன வித்தியாசம் இருப்பதாக கூறப்பட்டது. இந்த வித்தியாசம் அட்டவணை தயாரிக்கும் போது ஏற்பட்ட தாமதத்தினால் ஏற்பட்டதுடன் அதனை சீர் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) மஹாபொல நம்பிக்கை நிதியத்துக்கு வழங்கப்பட வேண்டிய நிதி ரூபா 2397,534/= ஆக நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. அவை சரியானதாகும். அட்டவணை தயாரிக்கும் போது அதில் வித்தியாசம் தோன்றியுள்ளது. பின்னர் அவை சரி செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4. கிடைக்க வேண்டிய அட்டவணை நிலுவைப்பணம்

(அ) சேவையிலிருந்து நீங்கியுள்ள அல்லது இடமாற்றம் பெற்று சென்றுள்ள பல்கலைக்கழக ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி பெறாதவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய ஊழியர் குழாம் கடன் நிலுவை இருக்கிறது. இவ் ஊழியர் கடன் நிலுவை தொகையை வசூலிக்கும் போது ஏற்றுக்கொண்டிருக்கும் உடன் படிக்கைக்கு அமைவாக இச்சேமலாப நிதி ஊழியர்களுக்கு விடுவிக்கும் போது அக்கடனை வசூலித்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதன்படி ஊழியர் சேமலாப நிதியை விடுவிக்கும் போது இப்பணம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இடமாற்றம் பெற்ற ஊழியர் ஒருவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பணத்தொகையானது 2011ம் வருடத்தினுள் முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் வெளிநபர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பல்வேறு சேவைகளை பெற்றுக் கொண்டதற்கேற்ற கடன் செலுத்த வேண்டிய கடன் நிலுவையை கடன் கொடுத்தவரால் காட்டப்பட்டதுடன் 2011 ஆம் வருடத்தின் முதன் காலாண்டினுள் நிலவை செலுத்தப்பட்டதனால் கணக்கு சரி செய்யப்பட்டது. கணக்கறிக்கை கணக்காய்வாளரிடம் சேமிக்கப்பட வேண்டிய திகதிக்கு நிலுவை சரி செய்யப்பட்டிருந்தது. அதன்படி நிலுவை உறுதிப்படுத்தும் தேவை எப்படியாயினும் பழைய நிலுவை தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கால அளவு பற்றிய தீர்மானமானது 2011 வருடத்தின் கணக்கின் மூலம் நிர்ணயிக்கப்படும்.

(இ) முகாமைத்துவம் பட்ட பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியில் வழங்கப்பட வேண்டிய முற்பணம் எல்லாம் 2011 வருடத்தினுள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஈ) 2010 டிசம்பர் 31ம் திகதியில் செலுத்தப்படாதிருந்த ஆய்வு முற்பணம் 2011 வருடத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.5 கணக்காய்வுக்கான சாட்சி இல்லாதிருத்தல்.**

அசையா சொத்து அறிக்கை தயாரிப்பது கணனி வலைப்பின்னலினூடாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது தற்போது கணனி வலைப்பின்னலினுள் இணைந்துள்ள எல்லா அசையா சொத்துக்களையும் உறுதிப்படுத்தி அதன் தகவல்களை சேர்த்துள்ளோம். அவை மதிப்பிடுவதற்காக மதிப்பிடல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டதுடன் அப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. அவ்விடயங்களில் இறுதி அம்சமாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் கணனி வலைப்பின்னலினுள் சேர்ப்பது எதிர்வரும் இரு மாதங்களினுள் நடைபெறும். இதன்படி 2011 அம் வருடத்திற்காக கணக்கினை சமர்ப்பிப்பதைத்தொடர்ந்து அசையா சொத்துக்கள் விபரத்தை சமர்ப்பிப்பதற்கு முடியும். PGDM முற்பணம் பற்றிய உபபிரிவின் ஜேனல் குறிப்பது விளக்கமாகவும் அதன் உபபிரிவு என்பன கணக்காய்வு பரிசோதனைக்கு அவசியமான முறையில் சமர்ப்பிக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.2.6 சட்டத்திட்டங்கள் விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ எல்லைகளுக்குட்படாதிருத்தல்.**

(அ) 2010 வருடத்தினுள் அசையா சொத்துக்களின் விபரம் ஆய்வு செய்யப்பட்டது. 2011 ம் வருடத்தின் அசையா சொத்துக்களின் விபரத்தை ஆய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வறிக்கை கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) I. பல்கலைக்கழகத்தினால் வைத்திய பீடத்தின் ஊழியர் குழாமிற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட வீட்டிலிருந்து மாதாந்தம் ஒரு வாடகைகாரருக்கு மாதாந்தம் ரூபா 1000/= வாடகையாகவும் , மின்சாரம் , நீர் வழங்கலுக்கான கட்டமாக ரூபா 300/= ம் 2011 செப்டெம்பர் மாதத்திலிருந்து அறவிடுவதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டது. உபவேந்தருக்காக பல்கலைக்கழகத்தினுள் வழங்கப்பட்ட இல்லத்திற்காக வாடகை அறவிடப்படவில்லை.

II. 1. மேற்குறிப்பிட்ட இலக்கம் (I) ல் குறிப்பிடப்பட்ட வீடுகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களிடமிருந்து மாதாந்த குடிநீர் மின்சார கட்டணங்களை 2011 செப்டெம்பர் மாதத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. உபவேந்தரின் இல்லத்துக்காக நடவடிக்கைகள் ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளவாறே ரஜரட்ட பல்கலைக்கழகத்திலும் எடுக்கப்பட்டது.

2. ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு உரிமையான ரம்பாவை ,மிஹிந்தலை பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்பாளர்களுக்கான வீட்டு வாடகை , நீர் கட்டணங்களை மீளாய்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. வீட்டு குடியிருப்பாளர்களால் அவர்களின் நீர் நுகர்வுக்கான கட்டணங்கள் அவர்களாலேயே செலுத்தப்படல் வேண்டும் என்பதாக பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

(இ). I. திட்டம் 395 (அ)

இலங்கை வங்கி நடைமுறைக்கணக்கு இலக்கம் 8586758, 6809656 மற்றும் 5022209 இந்நடைமுறை கணக்குகளில் சிலவற்றில் தொடராக பலமாதங்களாக நிதி வைப்போ , செலுத்தலோ நடைப்பெற்றிருக்கவில்லை. வங்கியின் கணக்கு நிலுவையோ , செலுத்தலோ வங்கி புத்தகத்தில் நிலுவையும் சமனாகவுள்ளது. இதன்படி வங்கி அறிக்கை தயாரிக்கும் போது தவறவிடப்பட்ட விடயங்களில் 2010.12.31ம் திகதிக்கு வங்கி அறிக்கையில் நிலுவையின் உண்மை நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எப்படியாயினும் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளப்படி கணக்கு செய்யப்படாதிருந்த மாதத்திற்கான வங்கி கணக்கறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

II. நி.கோ. 880

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இடர்கால கடனுக்கான விடயங்களைக் கையாளல் தொடர்பாக அலோசனைகளைப் பெற்றக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஈ). சுற்று நிருபம்

வாடகை வீடுகளின் வாடகையானது மீண்டும் மீள்பரீசீலினை செய்வதற்கு 2011 ம் வருடத்தினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(உ). அரச நிர்வாக சுற்று நிருபத்தின் படி ஊழியர்களின் கடமைக்கு சமூகமளித்தல், செல்லல் என்பவற்றை பதிவு செய்வதற்காக விரல் அடையாள நேர் கணிப்பிடல் இயந்திரம் (Finger print machines) பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.7. போதிய அதிகார வகைக்கூறல் அல்லாமல் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

(அ),(ஆ). இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தின்படி முழு பல்கலைக்கழகங்களும் உள்ளடக்குமாறு இது செயற்படுத்தப்படுகிறது. கணக்காய்வாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

(இ). அரசினால் பல்கலைக்கழகத்துக்கு சுவீகரித்து வழங்கப்பட்ட காணியினுள் உள்ள பொலீஸ் குடியிருப்புக்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையின் போது நாட்டின் நிலவிய பயங்கர வாத பிரச்சினையினை முன்னிட்டு அக்குடியிருப்புக்களை பெற்றுக்கொடுப்பதை பொலீஸ் திணைக்களம் தாமதப்படுத்தியுள்ளது. ஆயினும் 2006 வருடத்தினுள் பொலீஸ் திணைக்களம் ஒரு உடன் பாட்டுக்கு வந்துள்ளதுடன் அதற்கான நட்டஈட்டுப்பணம் பொலீஸ் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டது. ஆயினும் தொடர்ந்து பயங்கரவாத பிரச்சினையின் காரணமாக பொலீஸ் திணைக்களம் தனது சம்மதத்தை தாமதப்படுத்த ஆரம்பித்தது. அதன்படி திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிதி இலங்கை வங்கியில் 07 நாட்கள் , 03 மாதங்கள் என்ற அடிப்படையில் நிலையான வைப்பிலிடப்பட்டது. அதற்காக நிர்வாக சபையின் சம்மதமும் பெறப்பட்டது. ஆயினும் இவ்விடயம் 2010 வருடத்தில் வரும் வரைக்கும் தீர்க்கப்படாதிருந்தது.

2010 ம் வருடத்தினுள் பல்கலைக்கழகத்தினுள் பலவிதமான நிர்வாகப் பணிகள் நடைபெற்றதுடன் மாணவர் விடுதியின் நிர்மாணத்தை நிறைவு செய்வதற்கான நிதியை திறைசேரியிலிருந்து பெற்றக்கொள்வதில் சிரமம்ம ஏற்பட்டது. மாணவர் விடுதியின் நிர்மாணப் பணியை பூர்த்தி செய்வதற்காக நிருவாக சபையின் சம்மதத்துடன் இலங்கை வங்கியின் நிலையான வைப்பிலிருந்து ரூபா 18 மில்லியன் பணமும் நிலையான வைப்பின் வட்டியான ரூபா 8473,673/= பணமும் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் 2010 டிசம்பர் மாதத்தின் இறுதிப்பகுதியில் திறைசேரியினால் மாணவர் விடுதிக்கான நிதி ஒதுக்கப்பட்டது. அப்பணம் பொலீஸ் குடியிருப்பு காணிக்காக செலுத்த வேண்டிய நிதிக்காக ஒதுக்கப்பட்டது. அம்முழுப்பணமும் வட்டிப்பணமும் நிலையான வைப்பிலிடுவதற்கு போதாததினால் அப்பணத்தை வைப்பிலிடப்பட வில்லை. ஆயினும் 2011 வருடத்தினுள் நிர்வாக சபை பொலீஸ் திணைக்களத்துடன் ஒரு தீர்மானத்துக்கு வந்தது. அதனடிப்படையில் திறைசேரியினால் வழங்கப்படுகின்ற பணத்தை பகுதிப் பகுதியாக வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டது. இதற்காக வடடிப்பணத்தையும் பயன்படுத்தும் படி கணக்காய்வாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளப் படியால் இதற்காக வட்டிப் பணமும் பயன்படுத்தப்பட்டது.

03. நிதி மற்றும் செயற்பாட்டின் சாரம்சம்

3.1. நிதி சாரம்சம்

3.2. நிதி பெறுபேறு

3.2.1. விளக்கமான நிதி சாரம்சம்

} மீள்பரிசீலிப்புக்கிசைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 3.2.3. தன்னிச்சையின் காரணமான கொடுக்கல் வாங்கல்கள்

ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பீடத்தின் மருத்துவப்பீட மாணவர்கள் சிகிச்சை நடவடிக்கைக்கு போதியளவு இடவசதி அனுராதபுரம் வைத்தியசாலையில் இல்லாததன் காரணமாக , மாத்தளை வைத்தியசாலைக்கு இதுப்பற்றிய வேண்டுக்கோளுக்கிணங்க அங்கு வசதி செய்துக் கொடுக்கப்பட்டன. ஆயினும் அந்த சிகிச்சை நடவடிக்கைக்காக சமூகமளிக்கின்ற வைத்திய பீடமாணவர்களுக்காக மலசல கூடங்களும் ஓய்வறையும் புணரமைக்க வேண்டியிருந்தன. அதன் அடிப்படையில் ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிதி பெறப்பட்டதுடன் சிகிச்சை நடவடிக்கைகள் தற்போது அங்கு நடைப்பெற்று வருகின்றது. அந்த செலவினமானது ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மீண்டெழும் செலவாக கொள்ளப்பட்டது.

### 3.2. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.2.1. விடயதானம்

(அ)
(ஆ)
(இ)
(ஈ)

மீளாய்வு இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 3.2.2. தாமதமான செயற்திட்டம்

(அ) நிர்மானிக்கப்பட திட்டமிடப்பட்ட சமூகவிஞ்ஞான மானிட சாய்திர பீடத்தின் கட்டிடத்தின் நிர்மாணப்பணிகளுக்காக 2007 ம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதிப்பெறப்பட்டது. அது சம்மந்தமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்காக ஆலோசனை வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. அரச பொறியீயல் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட நிதியிலிருந்து 2007 அண்டு ஆலோசனை வழங்கல் நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கப்பட்டது. ஆயினும் 2008, 2009, 2010 ம் ஆண்டின் திறைசேரியிலிருந்து நிதி வழங்கப்பட்டமையினால் நிர்மாணப்பணிகள் தாமதமாகின. ஆயினும் 2011 ம் ஆண்டில் நிர்மாணப்பணிகளுக்காக திறைசேரியிலிருந்து நிதி கிடைத்தது. நிர்மாணப்பணிகளை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் செய்து வருகிறது.

(ஆ) ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் 2008 அண்டில் சிறுவர் பராமரிப்பு மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் செய்வதற்காக ஏற்றுக் கொண்டிருந்த ஒப்பந்தக்காரர் தனது நிர்மாணிப்பு பணிகளைக் கைவிட்டப்படியால் இந்நடவடிக்கைகள் தாமதமாகின. 2010 ம் ஆண்டில் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாதிருந்தப்படியால் அவ்வருடத்தினுள் இந்நடவடிக்கைகளை செய்ய முடியாமல் இருந்தது. 2011 ம் ஆண்டினுள் இந்நிர்மாணிப்புகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3.2.3. நிதி முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) பல்கலைக்கழகத்தின் பொது நிதிக்காக கிடைக்கின்ற நிதி மற்றும் செலவினங்களின் கையாளலுக்காக வேண்டி 16 வங்கி நடைமுறைக் கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு வங்கி கணக்குகளிலும் உள்ள கணக்குகளின் உள்ள நிதியின் குறைவு ஏற்படுமிடத்து ஏனைய வற்றிலிருந்து மற்றும் அதிகாரம் வங்கிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் முழு வங்கி நிதி நிலுவை 2010.12.31ம் திகதி ரூபா 20 இலட்சங்களும் கிட்டியது. ஆயினும் கணக்காய்வாளர் அறிக்கையில் வங்கிகளின் உள்ள கணக்கில் குறைவு மாதத்திற்கு மட்டுப்பட்ட அளவில் இருக்கவில்லை. இதற்கு திறைசேரியினால் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட காசோலைகள் தாமதமாக கிடைக்கப்பெற்ற காரணமாகும். அயினும் இந்நிலை டிசம்பர் 31ம் திகதியளவில் முழுமையாக நிவர்த்தியானது. 2011ம் வருடத்தினுள் இந்நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பொது நிதியில் எப்போதும் குறைவு ஏற்படவில்லை.

(ஆ) வெளி விரிவுரையாளர்கள்

கல்வி நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழகத்துக்கு வருவதற்கு தனிப்பட்ட வாகனங்களை உபயோகிப்பதுண்டு.அவர்கள் தாம் தனிப்பட்ட வாகனங்களை உபயோகிப்பதாக எழுத்து மூலமாக அறிவித்துள்ளதுடன் அதனைப் பகுதி தலைவர்களும் , பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி போக்குவரத்து செலவினம் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக பீடத்திணைக்களத்தின் அமைப்பின் படி இதை விட வேறு முறைகளில் வாகனங்களின் வருகைக்கான முறைகள் இருப்பதற்க இடவில்லை.

3.2.4. இரத்து செய்யப்பட்டமற்றும் அவசியமான அமைவு சொத்துக்கள்

(அ) இரத்துச்செய்யப்பட்ட வங்கி கணக்குகளை 2011 ம் வருடத்தில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தினுள் நிலையான சொத்துக்களிலிருந்து தற்போதைய பாவனையில் இல்லாத கழிக்கப்பட வேண்டிய சொத்துக்களை சுற்று நிருபத்துக்கமையவும் ஏல சட்டத்துக்கு அமைவாகவும் 2011 வருடத்தில் ஏலமிட்டு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) விரல் அடையாள நேர் கணிப்பு

இயந்திரத்தை (Finger print machines) வாங்கப்பட்டவுடன் பழைய இயந்திரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3.5. பாதிப்பும் நஷ்டமும்

திறை சேரியிலிருந்து 2010 ம் வருடத்தில் மீண்டெழும் நிதியை பெற்றுக் கொள்வதில் இடர்கள் ஏற்பட்டன. ஆயினும் ஊழியர்களின் சம்பளம் குறிப்பிட்ட தினத்தில் வழங்க வேண்டியுள்ளதால் திறை சேரியிலிருந்து சம்பளப்பணம் மாத்திரம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து ஊழியர் நம்பிக்கை நிதி காசோலைகளை அனுப்புவது தாமதமடைந்தது அதன்படி ஊழியர் நம்பிக்கை நிதி தாமதித்து செலுத்தியதன் காரணமாக 15 நாட்களுக்காக தாமதக் கட்டணம் ரூபா 14,064/= ஐ அறவிடப்பட்டது. இது விடயமாக பல்கலைக்கழகத்துக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் இந்நிலை தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது.

3.2.6. மனித வள முகாமைத்துவம்

2011ம் வருடத்தினுள் பல்கலைக்கழகத்தினுள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயினும் பேராசிரியர் , சிரேஷ்ட விரிவுரையாளராக பதவிகளை நிரப்புதலில் இடர் தோன்றியுள்ளது. அதற்காக வேறு பல்கலைக்கழக ஊழியர்களில் வருடாந்தம் ஏழு நாட்களுக்கு குறைவான விடுமுறையைப்பெற்ற பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்களிலிருந்து இவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட்டது.

2. முறைமை மற்றும் நிருவாகம்

அ, ஆ, இ கணக்கறிக்கை , பண்டகசாலை அசையா சொத்துக்களின் தொகுதி மற்றும் நிருவாகம். முகாமைக்குட்பட்ட வகையில் கணக்காய்வு கமிட்டி , நிதிமற்றும் முகாமைத்துவ கமிட்டி என்பன நியமிக்கப்பட்டிருப்பதுடன் நிதி மட்டும் , விநியோக கமிட்டி மாதாந்தம் ஒன்று கூடும். முகாமை மற்றும் கணக்காய்வு கமிட்டி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒன்று கூடுவதுடன் அதன் மூலம் உள்ளக நிருவாக செயற்பாடுகள் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளில் உள்ள நிருவாக பலவீனங்களை கணக்காய்வாளர்களினால் காட்டப்படுமிடத்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நிருவாக சட்டதிட்டங்கள் செயற்படுத்தப்படும்.

.......................................

(பேராசிரியர் . கே. ஏ. நந்தசேன.)

உபவேந்தர்